**குளச்சல் நகராட்சி**

**14.03.2024-ம் தேதி நடைபெற்ற நம்பிக்கையில்லா தீர்மான எண். 715 நகல்**

2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் பிரிவு 51 உட்பிரிவு (1) (2) (3) -(2) (4) ன் கீழ் நகர்மன்ற தலைவர் அவர்கள் மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தினை முன்மொழிந்து நகர்மன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள தீர்மானத்தின் மீது விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நடத்துவது.

| | |
|---|---|
| தீர்மானம் எண்.715 | குளச்சல் நகராட்சி 24 வார்டுகளை கொண்டது. இந்நகராட்சியின் தலைவராக திரு.அ.நசீர் அவர்கள் உள்ளார். இந்நகர்மன்றத் தலைவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் 15 நகர்மன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்டது. இதற்கான சிறப்பு கூட்டம் நகராட்சி ஆணையாளர் தலைமையில் 14.03.2024 முற்பகல் 10.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது. சுமார் ஒரு மணி நேரம் காத்திருந்தும் இக்கூட்டத்திற்கு நகர்மன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே நகர்மன்ற தலைவர் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்படுகிறது. |

ஆணையாளர்
குளச்சல் நகராட்சி